மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன். தீர்மானம் நிறைவேறியது. ஏற்போரே அதிகம்

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

10. அறிவிப்புகள்.

(அ) வரி வழக்கு தனித் தீர்ப்புமன்றச் சட்ட முன்வடிவு, 1992. (ஆ. செ,)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு வரி வழக்கு தனித் தீர்ப்புமன்றச் சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 35/1992) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

9. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) (தொடர்ச்சி).

(இ) வரி வழக்கு தனித் தீர்ப்புமன்றச் சட்ட முன்வடிவு 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரி வழக்கு தனித் தீர்ப்பு மன்றச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 35/1992). மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

''1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு வரி வழக்கு தனித் தீர்ப்பு மன்றச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு ஏண் 35/1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

27—4—1892ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. கே. கந்தசாமி

திரு. கே. கந்தசாமி ; * *

பிற்பகல் 1-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவில் தனி தீர்ப்பாயம்— தமிழகத்திலே விற்பனை வரிக்கு நாம் வரியை வாங்குகிறோம். அந்த வரியை வாங்கி வைத்துக் கொண்டு, வியாபாரிகள் கட்டுவதில்லை. பிறகு உச்ச நீதி மன்றத்திற்கு போகிறார்கள் : உயர் நீதிமன்றத்திற்குப் போகிறார்கள். அங்கேயெல்லாம் போவதால், வருடக் கணக்கிலே வழக்குகள் முடிவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. கந்தசாமி, நீங்கள் பேசியது, அடுத்த சட்டமுன்வடிவில் வருகிறது. அதிலேதான் நீங்கள் பேசயிருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; ஆகையால், தனி தீர்ப்பாயம்— ஒரு மன்றம் அமைக்கலாமா? அதை அமைப்பதற்கு அனுமதி கேட்கிறோம். அதற்கு அனுமதி தருவதா இல்லையா என்பதைப் பற்றி நீங்கள் பேசலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. கே. கந்தசாமி, இந்த சட்டமுன்வடிவின் மீது பேசுகிறீர்களா? அடுத்த சட்ட முன்வடிவா?

திரு. கே. கந்தசாமி : அடுத்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவரையில் அவர் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஏதேனும் கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் அதிகமாகப் பேசவில்லை என்றாலும்,

1992 ஏப்ரல் 28] [திரு. எஸ்.டி. சோமசுந்தரம்]

இதை நீங்கள் வரவேற்பீர்கள் என்பதிலே நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இதிலே நானும் பேசாமல் நிறைவேற்றலாம் என்று எண்ணினாலும்கூட, இதை இப்போது நாம் ஏன் எடுத்துக்கொண்டு வர வேண்டுமென்று சொன்னால், இதைப் போல தமிழ்நாடு நிலச் சீர்திருத்த சிறப்பு மேல்முறையீட்டு தீர்ப்பாயம் இருக்கிறது: Tamil Nadu Land Reforms Special Appellate Tribunal அது ஏன் வந்தது என்றால், நில சம்பந்தமான வழக்குகள் எல்லாம் உயர்நீதிமன்றத்திற்குச் சென்று பல ஆண்டுகள் அங்கே நின்று விடுகின்றன. உயர்நீதிமன்றத்திற்குச் சென்ற வழக்குகளிலே, இன்றைக்கு 1982-ஆம் ஆண்டு வழக்குதான், வருகிறது. இப்படி ஒரு Tamil Nadu Land Reforms Specia Appllcate Tribunal கொண்டு வந்ததினால்—இப்போது உங்களுக்கு ஒன்றை உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால் 30—12—1991-இல் அன்றைக்கு தலைவராக நீதிபதி திரு. ராமலிங்கம் வந்தபிறகு, இந்த 4 மாதங்களில் மட்டுமே முடிவு செய்யப்பட்ட வழக்குகள் 275. பல்வகை மனுக்கள் 225. விரைவிலே முடிக்க இருப்பவை 100. இன்றைக்கு உயர்நீதிமன்றத்தில் 1982-இல் உள்ள வழக்குகள் தான் நடந்து கொண்டிருக்கின்றன. அதைப் போலத்தான் வழக்குகளைத் துரிதப்படுத்த வேண்டும். என்பதற்காக வருகிற போது—நான் நீண்ட நேரம் சொல்லா விட்டாலும், சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால்,—உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள், விற்பனை வரியைப்பற்றி—11,171, அரசுக்கு வரவேண்டிய வரி அதிலே 248 கோடி ரூபாய். உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள் 173. அதற்கு வர வேண்டிய பணம் 29 கோடி ரூபாய். அதேபோல, இன்றைக்கு லாட்டரி சீட்டிலே வரவேண்டியது 150 கோடி ரூபாய். இதைச் சொல்வதற்குக் காரணம், வியாபாரிகள் வியாபாரம் செய்கிறார்கள்; வரி வசூலிக்கிறார்கள். அந்த வசூலிக்கிற பணம், அரசுக்குச் சொந்தமானது; அரசுக்குச் சொந்தமான பணத்தை வசூல் செய்து, அதை வைத்துக் கொண்டு அதற்குப் பிறகு ஏன் அவர்கள் நீதிமன்றங்களுக்குச் செல்கிறார்கள் என்றால், நீதிமன்றம் சென்றால் 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் கழித்துத்தான் தீர்ப்பு வரும். அதற்குள் 4 கோடி, 5 கோடி வைத்துக் கொண்டிருந்தால், அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு 'ரொட்டேஷன்' செய்கிறார்கள். இதை நீங்கள் கவனிக்க வேண்டும். அரசினுடைய பணத்தை வைத்துக் கொண்டு, அதை அவர்கள் முறைகேடாக வைத்துக் கொண்டு, அவ்வாறு செய்வதனால் அரசுக்கு வர வேண்டிய பணம் வராது இருப்பதனால்தான் இதை உடனடியாக முடித்து, பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாயையும், வியாபாரிகளிடமிருந்தும், மற்றவர்களிடமிருந்தும் வசூல் செய்ய வேண்டும் என்பதற்காகக் கொண்டு வரப்பட்டது என்பதைத் தெரிவித்து இதை நிறைவேற்றித் தர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1992 ஏப்ரல் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 25 முடிய மற்றும் இணைப்பு பட்டியலில் திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 25 முடிய மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவுவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்க்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது,

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

1992 ஏப்ரல் 28]

பிற்பகல் 2-00

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரி வழக்கு தனித் தீர்ப்பு மன்றச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 35/1992) நிறைவேற்றப் பெறவேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஈ) உணவகங்களிலும், தங்கும் விடுதிகளிலும் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ் நாடு உணவகங்களிலும், தங்கும் விடுதிகளிலும் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்த) சட்டமுன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 36/1992). மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்களிலும் தங்கும் விடுதிகளிலும் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 36/1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. கந்தசாமி :

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, 1934 ஆம் ஆண்டு., அன்றைய தினம் சென்னை இராஜதானியின் முதலமைச்சராக இருந்த மூதறிஞர்

*27-4-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது